<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI</u>

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

Case No.Crl.mp.375/2026

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சுமத்ரா | Prosecution | PW-2 Chief |
| Father Name | க/பெ.பன்னீர்செல்வம் | Defence | |
| Village | கொண்டல் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 60/2026 |

Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day

<u>**24.04.2026**</u>

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தாலுக்கா வள்ளுவக்குடி அஞ்சல் கொண்டல் கிராமம் நடுத்தெருவில் எண்.149 என்ற முகவரியில் வசித்து வருகிறேன். இந்த வழக்கின் புகார்தாரர் சித்ரா க/பெ.பழனி அவர்களை எனக்கு நன்கு தெரியும். அவர் என் கணவரின் அத்தை மகள் ஆவார். இந்த வழக்கு சொத்தான கொண்டல் கிராமம் நடுத்தெருவில் அமைந்துள்ள இடத்திற்கு பக்கத்தில் தான் நான் வசிக்கும் வீடு உள்ளது. அந்த இடம் ராதா ஆச்சி என்பவர் பெயரில் உள்ளது. அதன் புல எண்.87A ஆகும். இந்த வழக்கின் புகார்தாரரர் சித்ரா இந்த வழக்கு சொத்தின் உரிமையாளர் ராதா ஆச்சியின் 3வது மகள் ஆவார். இந்த வழக்கின் எதிரிகள் எனது பக்கத்து இடமான வழக்கு சொத்தின் உரிமையாளர் சித்ராவிடமோ அல்லது ராதா ஆச்சியின் மற்ற சட்ட ரீதியான வாரிசுகளிடமோ எந்த அனுமதியும் பெறாமல் ஆக்கிரமித்து வீடு கட்டி வந்த விபரம் எனக்கு நன்கு தெரியும்.

அந்த இடத்தில் மின் இணைப்பு பெறுவதற்கு எந்த வித ஆவணமும் இல்லாமல் போலியான ஆவணங்கள் தயார் செய்து மின்

இணைப்பை பெற்றிருக்கிறார்கள் என்ற விபரமும் எனக்கு நன்கு தெரியும். இந்த வழக்கின் இரண்டாரவது எதிரி ராஜமணிகண்டன் பெயரில் தான் அந்த மின் இணைப்பு உள்ளது. அந்த மின் இணைப்பு பெறுவதற்கு முன்பு அந்த இடத்தில் வேறு எதுவும் மின் இணைப்பு இல்லை. காலியாக தான் இருந்தது. தற்போது எதிரிகள் பயன்படுத்தி வரும் மின் இணைப்பு எண்ணானது இதற்கு முன்பு பக்கத்து இடத்தில் உள்ள மணிவண்ணன் பெயரில் உள்ளது. அந்த மணிவண்ணன் பெயரில் உள்ள இணைப்பு மேற்படி இந்த வழக்கு சொத்தில் மாற்றி பெயர் மாற்றம் செய்து ராஜமணிகண்டன் பெயரில் பெயர் மாற்றப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக நான் VAO விடம் கேட்டதற்கு அந்த இடத்தின் மனை ராதா ஆச்சி பெயரில் தான் உள்ளது. நான் அந்த இடம் சம்பந்தமா தொடர்பாக வேறு எந்த நபர்களுக்கும் யார் யெருக்கும் எந்த சான்றும் வழங்கவில்லை என்று என்னிடம் உறுதி அளித்தார். அதனை தொடர்ந்து கடந்த ஜனவரி மாதம் 28 ம் தேதி இவ்வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் ஆக்கிரமித்து இடத்தில் கட்டிய வீட்டில் கிரஹப்பிரவேசம் செய்துள்ளனர்.

தற்போது வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் மேற்படி 1 மற்றும் 2 எதிரிகள் மேற்படி கொண்டல் கிராமததை சேர்ந்த இளங்கோவன் சுதா என்பவர்களுக்கு வாடகைக்கு விட்டுள்ளார்கள். எனவே அந்த வழக்கு சொத்தானது இந்த வழக்கின் புகார்தாரர் சித்ராவிற்கும் மற்ற ராதா ஆச்சியின் சட்டரீதியான வாரிசுகளுக்கு மட்டுமே சொந்தமானது என்றும் அந்த இடத்தை சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமித்து போலி ஆவணங்கள் மூலம் மின் இணைப்பை பெற்ற மேற்படி வழக்கு எதிரிகள் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்குமாரு கேட்டுக்கொள்கிறேன். நான் மேலே கூறிய அனைத்து சங்கதிகளும் உண்மையானவை என்று உறுதிபட கூறுகிறேன்.

**முதல் விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**